இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அன்பர்களே, நான் சொல்வது இதுவே: இனியுள்ள காலம் குறுகியதே. இனி மனைவி உள்ளவரும் மனைவி இல்லாதவர்போல இருக்கட்டும். அழுபவர் அழாதவர் போலவும், மகிழ்ச்சியுறுவோர் மகிழ்ச்சியற்றவர் போலவும், பொருள்களை வாங்குவோர் அவை இல்லாதவர் போலவும் இருக்கட்டும். உலகச் செல்வத்தைப் பயன்படுத்துவோர் அவற்றில் முழுமையாக ஈடுபடாதவர்போல் இருக்கட்டும். இவ்வுலகு இப்போது இருப்பதுபோல் நெடுநாள் இராது. (1 கொரி 7: 29-31

# ஆசியா இளமையானது, ஆசிய திருஅவை அதே இளமை உணர்வோடு, ஆற்றலோடு நற்செய்தியை பகிர வேண்டும்!



## கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் வலியுறுத்து

பினாங்கு: கடந்த சனவரி 8-ம் திகதி திருஅவை இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு விழாவைக் கொண்டாடிய அன்று, கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் தமது 'கர்தினால்' நியமனத்திற்காக நன்றி திருப்பலி கொண்டாடினார்.

இங்குள்ள புக்கிட் மெர்தாஜாம் புனித அன்னம்மாள் மைனர் பெசிலிக்கா திருத் தலத்தில் நமது சக வட்டார ஆயர்களோடும், அருள்பணியாளர்களோடும் இறைமக்க ளோடும் இணைந்து கடவுளுக்குத் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

மலேசியாவுக்கான வத்திகான் தூதுவர் பேராயர் Wojciech Załuski அவர்களோடு, சிங்கப்பூர் கர்தினால் வில்லியம் கோ மற்றும் புரூணை, தாய்லாந்து, வியட்னாம், மங்கோலியா போன்ற நாடுகளின் திருஅவை தலைவர்களும், மலேசிய மறைமாவட் டங்களின் ஓய்வுப்பெற்ற பேராயர்கள், பேராயர்கள் மற்றும் ஆயர்களும், துறவற சபைகளின் தலைமை பொறுப்பாளர்களும், மலேசிய சமயங்களின் கூட்டு அமைப்பு பேராளர்களும், கிறிஸ்தவ கூட்டு மன்றத்தின் பொறுப்பாளர்களும் இக்கொண் டாட்டத்திக்குச் சிறப்பு வருகை புரிந்தனர்.



*கர்தினாலாக நியமனம் பெறும் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ்*

திருப்பலிகுத் தலைமைத் தாங்கிய கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் வருகைத்தந்த அனைவரையும் வரவேற்று திருப்பலியைத் தொடங்கினார்.

கடந்த ஆண்டு, ஜூலை மாதம் 9 திகதி அடுத்த புதிய கர்தினால்மார்கள் தேர்வுச் செய்யப்படவுள்ளனர் என்ற அறிக்கை வத்திக்கானில வெளியானது. அதன்படி கடந்த செப்படம்பர் 30 திகதி சனிக்கிழமை உரோமை உள்ளூர் நேரம் மாலை ஆறு மணிக்கு, வத்திக்கானின் புனித பேதுரு பேராலய வளாகத்தில் நடைபெற்ற திருவழிபாட்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கர்தினால் நிலைக்கு தேர்வுப்பெற்ற 21 ஆயர்களை உயர்த்தினார்.

இந்த 21 பேர்களில் ஒருவராக நமது பினாங்கு மறைமாவட்டத்தின் ஆயர் டத்தோ ஶ்ரீ செபஸ்தியன் பிரான்சிஸ் அவர் கள் மலேசிய திருஅவையின் இரண்டாவது கர்தினாலாக நியமனம் பெற்றார் என்பது நாடறிந்த செய்தியாகும்.

### கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ்

கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் 11 நவம்பர் 1951-ல் தென் மாநிலமான ஜொகூரில், ஜொகூர் பாருவில் பிறந்தார். குருத்துவத்தில் ஆர்வம் கொண்ட இவர் 1967-ல், அதாவது தமது 16-வது வயதிலேயே சிங்கப்பூரில் அமைந்திருந்த புனித பிரான்சிஸ் சேவியர் இளங் குருத்துவக் கல்லூரியில் இணைந்தார்.

தொடர்ந்து, மூன்றாண்டுகள் கழித்து பினாங் கில் College General எனப்படும் குருத் துவக் கல்லூரியில் இறையியல் கல்வி யைத் தொடர்ந்தார். பின்னர், தமது 26வது வயதில், மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத் தில் 28 ஜூலை 1977-ல் அருள்பணியாள ராக அருள்பொழிவு செய்யப்பட்டார்.



*நன்றி திருப்பலி கொண்டாட்டத்தில் கர்தினாலோடு இதர ஆயர்கள்*

அடுத்து மலாக்கா, புனித பிரான்சிஸ் சவேரியார் பங்கில் 1977 முதல் 1981 வரையிலும். தொடர்ந்து சிறிது காலம் ஜொகூர் பாரு, அமல உற்பவி அன்னை பங்கிலும் பங்குத்தந்தையாகப் பணியேற் றிருந்தார்.

இதற்கடுத்து, dogmatic theology எனும் துறையில் மேல் படிப்பை மேற்கொள்ள உரோமைக்குச் சென்று 1983-ல் நாடு திரும்பியதும், மறுபடியும் மலாக்கா புனித சவேரியார் பங்கின் பங்குத் தந்தையாக அமர்த்தப்பட்டார். அங்கிருந்து, பினாங்கு குருத்துவக் கல்லூரியில், dogmatic theology பேராசிரியராகவும் ஆன்மீக இயக்குநராக வும், அங்கு புலாவ் திக்கூசில் உள்ள புனித அமலோற்பவ அன்னை பங்குத்தந்தை யாகவும் பணியாற்றினார்.

அடுத்து, மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத் தில் பேரருட்தந்தையாக (Msgr) 2003 முதல் 2012 வரை நியமனம் பெற்றார். பின்னர் அங்கிருந்து நியூயோர்க்கில் உள்ள Maryknoll School of Theology எனும் பல்கலைக்கழகத்தில் 1991-ல். 'நீதியும் அமைதியும்' எனும் துறையில் மேற்கல்வி பெற்று நாடு திரும்பினார்.

நிறைவாக, 7 ஜூலை 2012-ல் பினாங்கு மறைமாவட்டத்தின் ஐந்தாவது ஆயராக அன்றைய திருத்தந்தை 16-ம் பெனடிக்ட் அவர்களால் நியமனம் செய்யப்பட்டார்.

இவ்வாறு படிப்படியாக உயர்ந்த இவரை திருத்தந்தை பிரான்சிஸ் கர்தினால் நிலைக்குத் தேர்வுச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 8 சனவரி அன்று, கொண்டாடப்பட்ட நன்றி திருப்பலியில் நாடெங்கிலும் இருந்து கர்தினால் அவர்களுக்கு வாழ்த்துக்கூற நூற்றுக்கணக்கானோர் பேருந்துகளிலும் சொந்த வானகங்களிலும் வருகைத்தந்தனர்.

திருப்பலியில் கர்தினால் அவர்கள் அனவருக்கும் கடவுளின் ஆசீரை வழங்கி நன்றி கூறினார். நிறைவாக, வருகைத் தந்தோருக்கு இரவு உணவும் வழங்கப் பட்டது.

> 'ஆயர் செப்ஸ்தியன் பிரான்சிஸ் கர்தினலாக நியமனம் பெற்றது, புனித அன்னம்மாள் பரிந்துரையில் நிகழ்ந்த அற்புதம்'
>
> வத்திகான் தூதுவர் பேராயர் Wojciech Załuski

# இறைவார்த்தை ஞாயிறு

## சனவரி 21, 2024

### இறைவார்த்தை நமது வாழ்விற்கும், இறை நம்பிக்கைக்கும், திருஅவையின் மறைப்பரப்புப் பணிக்கும் மையமாகும்.



இறைவார்த்தையின் நடுநிலை நமக்கு நினைவுறுத்தும் வகையில் 30 செப்டம்பர் 2019, அன்று பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள், பொதுக்காலம் 3-ம் ஞாயிறை "இறைவார்த்தையின் ஞாயிறு" என்று அறிவித்துக் கடைப்பிடிக்க பணித்தார்.

குறிப்பிட்ட ஒரு நாளை "விழாவாகக் கொண்டாடி, கற்கவும், இறைவார்த்தையை பரப்புரை செய்வதும் "திருஅவைக்கு உறுதுணையாக இருக்கும், அதாவது இறைவார்த்தையின் கருவவூலத்தை உயிர்த்த ஆண்டவர் எவ்வாறு நமக்கு திறந்து அருளினார் எனும் புதிய அனுபவத்தைப் பெறுகிறது. அத்துடன் புதைந்து கிடக்கும் அறிந்துக் கொள்ள முடியாத செல்வத்தை உலகிற்க்கு அறிவிக்க நமக்கு வாய்ப்பளிக்கிறது" என்றார் பாப்பரசர்.

இறைவார்த்தை ஞாயிறு ஒரு நாள் நிகழ்வு அல்ல, மாறாக, ஓராண்டு நிகழ்வாகும். இவ்வோராண்டு நிகழ்வில் இறைவார்த்தை வாசிப்பு, கற்றல், தியானித்தல் மற்றும் இறைவார்த்தை பகிர்வு என அனைத்தும் இடம் பெறும்.

2021-ம் ஆண்டு முதல் மலேசியா, சிங்கப்பூர், புரூணை ஆயர் பேரவை பொதுக்காலம் 3-ம் ஞாயிறை "இறைவார்த்தை ஞாயிறாக" அனுசரித்து வருகிறது. கொண்டாட்டங்களை கண்காணிக்கவும் இப்பேரவை பொறுப்பேற்றுள்ளது.

பொதுவாகவே, இறைவார்த்தை ஞாயிறு பற்றிய அறிதல் விசுவாசிகளிடையே குறைவாகவே உள்ளது என இப்பேரவை அறிந்துள்ளது.

இதற்கு சில காரணங்கள் உள்ளன. இது ஒரு புதிய முயற்சி. இறைவார்த்தை ஞாயிறு கொண்டாட்டத்தின் முக்கியத்துவத்தை முழுமையாக அறிந்துக் கொள்ளவும் ஈடுபடுத்திக் கொள்ளவும் சிறிது காலமாகும்.

ஆண்டு தொடக்கத்தை நெருங்கும் வேளையில், பள்ளிகள் திறக்கப்படும். கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு முடிந்த நேரம். பொதுக்காலம் 3-ம் வாரம் ஞாயிறு இறைவார்த்தை ஞாயிறு கொண்டாட்ட நிகழ்வுகளை ஏற்பாடுச் செய்ய நேரம் எடுத்துக் கொள்ளும்.

இருந்த போதும், இப்பகுதியில் "விவிலிய ஞாயிறு கொண்டாட்டத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க விவிலிய ஆணையம் கடமைப்பட்டுள்ளது.

தனிநபராக, குடும்பமாக, குழுவாக, பங்காக மற்றும் மறைமாவட்டமாக செய்வதற்கு சில பரிந்துரைகளும் முயற்சிகளும் முன் வைக்கப்படுகிறது. இதன் வழியாக நமது வாழ்விலும், இறை நம்பிக்கையிலும், திருஅவையின் மறைப்பரப்பிலும் நாம் கொண்டிருக்கும் ஈடுபாட்டை ஆழப்படுத்தவும், இறைவார்த்தையின் பால் அன்பும், புரிந்துணர்வும் கொள்ள வகை செய்ய முடியும்.

**தனிநபராக**

ஒவ்வொருவரும் ஒரு விவிலியம் கொண்டிருக்க ஊக்கப்படுத்துதல். ஒன்று வாங்கினால் ஒன்று பரிசாக கிடைக்கும் பிரச்சாரம் வழியாக ஒருவர் இரண்டு விவிலியங்களை வாங்க முடியும். தங்களுக்கு ஒன்றும் வாங்க முடியாதவர்களுக்குப் பரிசாக ஒன்றும் கொடுக்கலாம்.

விவிலிய படிநிலை முறை அல்லது அன்றாட வாசகங்கள் உதவியுடன் தினமும் இறைவார்த்தை வாசிக்கும் பழக்கத்தையும், தியானிக்கும் பழக்கத்தையும் வளர்க்க வேண்டும்.

விவிலியத்திலிருந்து ஒரு புத்தகத்தைத் தேர்வுச் செய்து ஓர் ஆண்டில் வாசித்து முடிக்கும் திட்டத்தை வரையவும்.

**சமூகம், பங்கு, மறைமாவட்டம்**

ஒரு விவிலியம் அல்லது விவிலியத்தில் ஒரு புத்தகத்தை ஒவ்வொருவருக்கும் கொடுங்கள்.

2.நற்செய்தி நூலைப் பவனியில் தூக்கிச் சென்று, பீடத்தின் ஓர் இடத்தில் எழுந்தேற்றம் செய்ய வேண்டும். நற்செய்தி நூலிலிருந்து அருட்பணியாளர் அல்லது திருத்தொண்டர் நற்செய்தியை அறிக்கையிடுவார்கள்.

3. மறையுரையில் இறைவார்த்தைக்கு உரிய மரியாதைக் குறித்து வழியுறுத்திப் பேச வேண்டும்.

4.அருட்பணியாளர்கள் கூடுதல் கவனம் எடுத்து ஆண்டு முழுவதும் தங்கள் மறையுரையில் மக்கள் எளிய வகையில் புரிந்துக் கொள்ளும் மொழியில் இறைவார்த்தைப் பற்றி அறிந்துக் கொள்ள உதவ வேண்டும்.

5.இறைவார்த்தை ஞாயிறு அன்று வாசகம் வாசிப்பவர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களைப் பணியில் அமர்த்தலாம்.
6.பங்கில் விவிலியப் பணிக்குழுவை அமைத்து, இறைவார்த்தைப் பயன்பாட்டை வளர்ப்போம்.

7.அடிப்படை விவிலிய கருத்தரங்குகள் ஏற்பாடுச் செய்யலாம். பங்கெடுத்தவர்கள் பங்கில் இறைவார்த்தைப் பகிர்வு குழுக்களை அமைக்கலாம்.

மறைக்கல்வி மாணவர்களுக்கு விவிலிய நிகழ்ச்சிகளை ஏற்பாடுச் செய்யலாம். உதாரணத்திற்கு விவிலிய கதை சொல்லுதல், விவிலிய புதிர் போட்டி, இறைவார்த்தை மனனம். இதன் வழி விவிலிய வாசிப்புப் பழக்கத்தை வளர்க்க முடியும்.

விவிலிய விழா ஏற்பாடுச் செய்து, இளைஞர்கள் விவிலிய பாடல்கள், நாடகம் போன்றவற்றை நடத்தலாம்.
இணையம் வழி, அஞ்சல் வழி மற்றும் பல விவிலிய கல்வி முறைகளை அறிமுகப் படுத்தலாம்.

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதத்தை விவிலிய மாதமாக அறிந்து, மேற் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை நேரம் எடுத்து, நடத்தி, இறைவார்த்தை வாசிப்பு, கற்றல் மற்றும் பகிர்ந்துக் கொள்ளுதலை வளர்க்க முடியும்.

இறைவார்த்தை வாசிப்பை, கற்றலை, செபிப்பதை, பகிர்ந்துக் கொள்வதை ஊக்குவிப்போம், வளர்ப்போம். இதனால் இறைவார்த்தை நமது வாழ்விற்கும், இறை நம்பிக்கைக்கும், திருஅவையின் மறைப் பணிக்கும் மையமாகும்.

ஆயர் ரிச்சர்ட் இங்
விவிலிய ஆணையர்

**அப்போது மறைநூலைப் புரிந்து கொள்ளுமாறு அவர்களுடைய மனக்கண்களைத் திறந்தார்.**
**(லூக்கா 24:45)**




**நாம் நற்செய்தியின் மக்கள்!**

**நன்மை பயக்கும் செய்திகளைத் தரும் கருவிகளாக நாம் மாறவேண்டும். நாம் பரிமாறும் செய்திகள், வெறும் தகவல் பரிமாற்றமாக இல்லாமல், செயலுக்கு, அதுவும், உன்னதமானச் செயலுக்கு, மக்களைத் தூண்டும் சவால்களாக அமையவேண்டும். அனைத்திற்கும் மேலாக, வாய் வார்த்தைகள் வழியே பகிர்ந்துகொள்ளப்படும் செய்தியைவிட, நம் வாழ்வின் வழியே நற்செய்தியைப் பறைசாற்றும் கருவிகளாக நாம் ஒவ்வொருவரும் மாறவேண்டும் என்று, இந்த இறைவார்த்தை ஞாயிறன்று மன்றாடுவோம் !!!**

# அழைக்கும் இறைவன் பணியேற்போம்!

இன்றைய ஞாயிறு இறைவார்த்தையின் ஞாயிறாக நாம் கொண்டாடுகின்றோம். இன்றைய வாசகங்கள் மிகவும் குறுகியது. ஆனால் அவை சொல்லும் செய்திகள் மிகவும் ஆழமானவை. எவ்வாறு கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்று சொல்வார்களோ அதுபோல மிகவும் எளிமையான வசனங்கள் நமக்கு மிகவும் வலிமையான செய்தியைத் தருகின்றன.

இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் யோனாவுக்கு ஆண்டவரின் அழைப்பு அருளப்படுகிறது. யோனா அறிவித்த வார்த்தைக்கு செவிகொடுத்து நினிவே மக்கள் அனைவரும் மனம் மாறி தங்கள் வாழ்வை இறைவன் பக்கம் திருப்பியதாக நாம் வாசிக்கறோம்.

இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் கொரிந்து மக்களுக்கு இவ்வுலகின் ஆசைகளை விட்டு விட்டு, கடவுள் பக்கம் திரும்புமாறு அழைப்பு விடுக்கிறார். இன்று நாம் கொண்டாடும் இறைவார்த்தை ஞாயிறுக்கேற்ப இன்றைய நற்செய்தி நிகழ்வு மிகப்பெரிய முத்தாய்ப்பாய் அமைகிறது. இன்றைய நற்செய்தியில் மூன்று முக்கியமான தலைப்புகளான மன மாற்றம், நற்செய்தியை நம்புதல், இறையாட்சி ஆகியவற்றை நாம் சிந்திப்போம். இயேசுவே இந்த அழைப்பை முதன்முதலில் தொடங்கி வைக்கின்றார்.

இவ்வாறு, இன்றைய முதல் வாசகத்தில் யோனாவும், நற்செய்தி வாசகத்தில் இயேசுவின் முதல் நான்கு சீடர்களும் அழைக்கப்பட்ட வரலாற்றை நாம் வாசிக்கிறோம்.

மனமாற்றம் என்பது பாவ வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கிவிட்டு, தூய வாழ்வை நோக்கிய ஒரு பயணம். இயேசு வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல; இக்காலத்திலும் நம்மில் பலருடைய வாழ்வு இறைநம்பிக்கையில் குறைந்து காணப்படுகிறது. இந்த சூழலில் நமக்கு இறைவனின் இரக்கத்தினால் நல்வாழ்வு ஒன்று உண்டு என்னும் நற்செய்தி பகிரப்படுகிறது. அவரின் அழைப்பை ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் வாழ்க்கையில் நிறைவு உண்டு.

சீடர்களாகிய நாமும் அழைக்கப்பட்டவர்கள். அழைப்பவர் ஆளுமை நிறைந்தவர். அழைப்பு மறுக்கமுடியாதது. அழைக்கப் படுபவர் அந்தஸ்து அவசியமில்லை. அழைக்கப்படுபவர் முற்றிலும் புதிய, உயரிய ஒரு பணிக்காக அழைக்கப்படுகிறார் என்பதே நமது நம்பிக்கை.

அன்று மனம் மாற்றம் நினிவே நகர் மக்களுக்கு மறு வாழ்வைப் பெற்றுத் தந்தது என்பதை இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கின்றது. அங்கு தவறை உணர்ந்த மக்கள், மனவருத்தம் அடைந்து, மனமாறுகிறார்கள். மனம் மாற்றம் இறைவனின் மனதை மகிழ்வித்து புதுவாழ்வைப் பெற்றுத் தருகிறது. நாமும் நமது அழைப்புக்குச் செவிசாய்த்து உள்ளத்தைத்த தூயமைம்மடுத்தி அழைப்புக்கு ஏற்ற வாழ்வு வாழ வேண்டும்.

ஆண்டவர் இயேசு, நற்செய்தியில், "என் பின்னே வாருங்கள்; நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" என்றுதான் நம்மையும் அழைக்கிறார். நமக்கான அழைப்பு பேருக்கும் புகழுக்குமானதல்ல. நற்செய்தியை பிறருக்கு அறிவிக்கும் பணிக்குரியது. இயேசுவா அறியாதார் அவரைக் கண்டடையும் பணிக்குரியது. ஆகவே, அழைக்கப்பட்டிருக்கும் நாம், இயேசுவின் நற்செய்திக் குரியவர்கள் என்பதை மனதில் நிறுத்தி, சீடத்துவ வாழ்க்கையைப் பொறுப்போடு இவ்வுலகில் நிறைவேற்றுவோம்.

இறைவார்த்தை இருபக்கமும் கூர் வாய்ந்தது. அதைப் பிறரைக் காயப்படுத்த பயன்படுத்தாமல், பிறரைப் பண்படுத்தப் பயன்படுத்துவோம்.

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**ஆண்டின் பொதுக்காலம் 3-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | யோனா 3:1-5,10 |
| திரு.பாடல் | திபா: 25: 4-9, 6-7, 8-9 |
| 2-ம் வாசகம் | 1 கொரி: 7:29-31 |
| நற்செய்தி | மாற்கு 1:14-2 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 3**